உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்

இது

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்

எனப் பெயரிய

## சைவ மஹா சபையின்

மாதாந்தப் பத்திரிகை.


| மலர் 8 | துந்துபிஷு சித்திரைமீ 1922ஷு எப்பிரல்மீ | இதழ் 1 |
|---|---|---|


உள்ளுறை — பக்கம்.


சிவஞானபோதம் ... ... ... 1

தேவார வைப்புத்தல விளக்கம் ... ... ... 3

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் 23-வது வருடப் பூர்த்தி விழா ... ... ... ... 8

சபாக்கிரந்தம் ... ... ... ... 9

சைவக் கிரியாதிகார நிரூபணம் ... ... ... 19


இஃது

தேவகோட்டை

ஸ்ரீமான் மெ. அரு. கா. இராமநாதன் செட்டியாரவர்களுக்குச் சமர்ப்பிக்கப்பெறுவது.

---


பத்திரிகாசிரியர்:

இருக்கம் - ஆதிமூல முதலியார்,

(Retired Accountant, Military Accts., Department)

நெ. 43, பாளையப்பன் வீதி, எழுகிணறு, சென்னை.


---


சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை.

1922.

தபாற்கூலி உட்பட வருடச்சந்தா ரூபா ஒன்றரை.

# திராவிட மாபாடியம்

என்னும்

# சிவஞான பாடியம்

முற்றிலும் வெளிவந்து விட்டது.

ஞான சாத்திரங்க ளெல்லாவற்றிற்கும் தலையாய தாய் நூலாகிய சிவஞான போதத்திற்கு மாதவச் சிவஞான சுவாமிகள் அருளிச்செய்த மாபாடிய உரையில் சில பாகங்களே இதுகாறும் அச்சிடப் பெற்றிருந்தன. இப்போது மாபாடிய முற்றிலும் ஆறுமுக நாவலர் அச்சுக்கூடத்தில் அச்சிடப் பெற்றுள்ளது. இதின் விலை ரூ. 5—0—0. வேண்டுவோர் சென்னை, தங்கசாலை வீதியில் 300-வது நெ. நாவலர் வித்தியாநுபாலன அச்சுக்கூடத்திலேனும், சிதம்பரம் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையிலேனும் தாமதமின்றிப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

---

## அறிவிப்பு.

இப்போது வி. பி. தபாலில் அனுப்பப்படுவன யாவும் ரிஜிஸ்டர் செய்தே அனுப்பப்படல் வேண்டும். சந்தாதாரர்கள் சந்தா ரூபா $1\frac{1}{2}$ யோடு இரண்டணா சேர்த்து ரூபா 1-10-0 கொடுக்க வேண்டியிருக்கிறது. சந்தாதாரர்களே மணியார்டர் மூலமாய் ரூபா 1-6-0 அனுப்பினால் இரண்டணா அநுகூலமாயிருக்கும். எமக்கும் பிரயாசை குறையும். இதை அன்பு கூர்ந்து சந்தாதாரர்கள் சிந்தித்திடுக.

பத்திராதிபர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.


| மலர் 8 | துந்துபிஸூ சித்திரைமீ<br>1922ஸூ ஏப்ரல்மீ | இதழ் 1 |
|---|---|---|


### விநாயகர் காப்பு

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்.

### சமய குரவர் துணைக்கோடல்

சைவத்தின் மேற்சமயம் வேறிலையதிற் சார்சிவமாந்
தெய்வத்தின் மேற்றெய்வ மில்லெனு நான்மறைச் செம்பொருள்வாய்
மைவைத்த சீர்திருத் தேவார முந்திரு வாசகமு
முய்வைத் தரச்செய்த நால்வர்பொற் றாளெம் முயிர்த்துணையே.

---

## சிவஞான போதம்

### (பன்னிரண்டாஞ் சூத்திரம்)

செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
வம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமு
மாலயந் தானு மரனெனத் தொழுமே.

(இ - ள்) செம்மலர் நோன்றாள் = (அயரா வன்பின் அரன் கழலடைந்த சீவன் முத்தன்) செங்கமல மலர் போல் விரிந்து விளங்கிய முதல்வனது சிபாதத்தை — சேரல் ஒட்டா = அணைதற்கு உடம்படாது அயர்த்தலைச் செய்விக்கும் — அம்மலம் கழீஇ = அவ்வியல்பினையுடைய மும்மல வழுக்கை ஞான நீராற் கழுவி — அன்பரொடு மரீஇ = (தன்னைப்போல அயரா வன்பின்

அரன் கழலடைந்த) மெய்ஞ்ஞானிகளோடு கலந்து கூடி — மால் அற நேயம் மலிந்தவர் வேடமும் = (அவ்வாறு கழுவப்பட்டு) மலமயக்கு நீங்க (அன்பரொடு கூடி) அன்பு மிக்குடைய அவரது திருவேடத்தையும் — ஆலயம் தானும் = சிவாலயத்தையும் — அரன் எனத் தொழுமே = முதல்வன் எனவே கண்டு வழிபட்டு வாழ்வான் (எ - று.)

நோன்றாள் = அடியார்களைத் தாங்குந் திருவடி. நோன்றல் = பொறுத்தல்.

இதனால் சீவன் முத்தற்கு ஒரு சமயத்தில் அறிவிச்சை செயல்கள் புறத்துச் செல்லுமாயின், மலத்தை நீக்குதலிலேயே அறிவும், அன்பரொடு மருவுவதிலேயே இச்சையும், திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவனென வழிபடுதலிலேயே செயலும் நிகழும் என்பதை யுணர்த்தி, அவ்வாறு உணர்த்து முறைமையில் வாக்கிற்கும் மனத்திற்கும் எட்டாமல் அதீதமாய் அயரா அன்பினால் அணைந்து வழிபட நின்ற முதல்வனை வாக்கிற்கும் மனத்திற்கும் எட்டும்படி அன்பர் வேடத்திலும் ஆலயத்திலும் தெரியக்கண்டு வழிபடும் முறைமை உணர்த்தியவாறும்.

## இச்சூத்திரத்தின் அதிகரணங்கள்.

1. செம்மலர் நோன்றாள் சேரலொட்டா அம்மலங் கழீஇ
2. அன்பரொடு மரீஇ
3. மாலற நேயமலிந்தவர் வேடமு மாலயந் தானும் அரனெனத் தொழுமே.

## இச்சூத்திரத்தின் சூர்ணிகை

1. மும்மலங்களையுங் களைக.
2. சிவஞானிகளுடனே கூடுக.
3. சிவஞானிகளையும் சிவலிங்கத்தையும் சிவனெனவே தேறி வழி படுக.
4. வழி படாமை ஒழிக.

## இச்சூத்திரத்தின் வார்த்திகம்

1. ஈண்டு ஆணவம் மாயை காமிய மென்னும் மலங்களைக் களைக என்றது — அவை தாம் ஞானத்தை உணர்த்தாது அஞ்ஞானத்தை உணர்த்து மாகலான்.

2. இனிச் சிவபத்தர்க ளோடிணங்குக என்றது = அல்லாதார் அஞ்ஞானத்தை உணர்த்துவ ராகலான்.

3 இனிப் பத்தரது திருவேடத்தையுஞ் சிவாலயத்தையும் பரமேசுரனெனக் கண்டு வழிப்படுக என்றது = அவன் மற்றிவ் விடங்களிற் பிரகாசமாய் நின்றே அல்லாத விடத்து அப்பிரகாசமாய் நிற்றலான்.

4. இனி இவ்விடங்களின் வழிபடுக என்றது = நரம்பு நாடி முதலானவற்றைத் தானதுவாய் வரும் புருடன் அவையாகாவாறு அப்புருடனு மாகலான்.

இச்சூத்திரத்தின் உதாரண வெண்பா எட்டு.

---

# தேவார வைப்புத்தல விளக்கம்.

(முன் தொடர்ச்சி)

## 23-வது பேரூர் என்பது-மேலைச்சிதம்பரம்.

### திருநாவுக்கரசுநாயனர் அருளிச்செய்த க்ஷேத்திரக்கோவை.

திருச்சிற்றம்பலம்.

ஆரூர்மூலட்டானமானைக்காவுமாக்கூரிற்றான்றோன்றிமாடமாவூர்
பேநூர்பிரமபுரம்பேராவூரும்பெருந்துறைகாம்பீலிபிடவூர்பேணுங்
கூரார்குறுக்கைவீரட்டானமுங்கோட்டூர்குடமூக்குக்கோழம்பமும்
காரார்கழுக்குன்றுங்கானப்பேருங்கயிலாயநாதனையே காணலாமே.

திருச்சிற்றம்பலம்.

### சுந்தரமூர்த்திநாயனர் அருளிய கோயிற்றேவாரம்.

திருச்சிற்றம்பலம்.

பாரூருமரவல்குலுமைநங்கையவள்பங்கன்பைங்கணேற்ற
னாரூரன்றருமனூர்தமர்செக்கிலிடும்போதுதடுத்தாட்கொள்வா
னாரூரன்றம்பிரானாரூரன்மீகோங்கிலணிகாஞ்சிவாய்ப்
பேநூர்பெருமானைப்புலியூர்ச்சிற்றம்பலத்தேபெற்றாமன்றே.

திருச்சிற்றம்பலம்.

இதன் மகிமை அச்சிட்டுள்ள பேரூர்புராணத்திலறிக. சுவாமி பெயர்பட்டீசுவரர், அம்பிகை பச்சைநாயகி, அரசம்பலவாணர். காஞ்சி நதியென்றும், கலிகன்மநாசினியென்றும் பெயருள்ளநொய்யலாறு, சிவலிங்கப்பெருமானுக்கு குளப்படிச்சுவடும் கோட்டுச்

சுவடும் காமதேனுவின் கன்றுவிளையாடிய காரணத்தால் காணப் படுகின்றன. அவ்விளையாடலைச் சிவபெருமான் மகிழ்ந்தனர். இத் தலம் கோயமுத்தூர் ரயில்ஸ்டேஷனுக்கு மூன்றுமைலிலுள்ளது.

## 24-வது நல்லக்குடி என்பது-நல்லக்குடி, குயிலாலந்துறை.

### திருநாவுக்கரசுநாயனர் அருளிய அடைவுதிருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்

நற்கொடிமேல் விடையுயர்த்த நம்பன்செம்பங்குடி நல்லக்குடி நளி நாட்டியத்தான்குடி, கற்குடிதென்களக்குடி செங்காட்டங்குடி கருந்திட் டைக்குடி கடையக்குடிகாணுங்கால், விற்குடி வேள்விக்குடி நல்வேட்டக் குடி வேதிகுடிமாணிகுடி விடைவாய்க்குடி, புற்குடிமாகுடி தேவன்குடி நீலக்குடி புதுக்குடியும் போற்றவிடர்போகுமன்றே.

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சூரியன் பூஜித்தது. சுவாமிபெயர் ஆலந்துறையப் பர், அம்பிகை குயிலாண்டநாயகி என்னும் மதுரவாக்கு விநோ தினி, சூரியதீர்த்தம். இது மாயூரம் ரயில் ஸ்டேஷனுக்கு 4-மைலி லும் மாயூரநாதராலயத்திற்கு 1-மைலிலுமுள்ளது.

இதுவே பின்சொல்லும் குயிலாலந்துறையெனத் தோன்று கிறது.

## 25-வது கருந்திட்டைக்குடி என்பது-கருந்தட்டாங்குடி.

சுவாமிபெயர் வசிஷ்டேசுவரர்-அம்பிகை பெரியநாயகி. சந் நிதிக்கெதிரில் வசிஷ்டதீர்த்தம். இக்காலத்து மத்தீர்த்தத்தில் மூழ் கினோர்க்கு விஷந்தீர்தலுண்டு. இந்த ஆலயம் வசிஷ்டர் பூஜித்தது. இத்தலம் தஞ்சாவூர் ரயில் ஸ்டேஷனுக்கு 1-மைலிலுள்ளது.

## 26-வது கஞ்சாறு-என்பது-ஆனந்தத்தாண்டவபுரம்.

### திருநாவுக்கரசுநாயனர் அருளிய க்ஷேத்திரக்கோவை.

திருச்சிற்றம்பலம்.

உஞ்சேனை மாகாளமூறலோத்து ருருத்திரகோடி மறைக்காட் டுள்ளு
மஞ்சார் பொதியின்மலை தஞ்சைவழுவூர் வீரட்ட மாதானம் கேதாரத்தும்
வெஞ்சமாக்கூடல் மீயச்சூர் வைகாவேதீசுரம் விவீசுரம் வெற்றியூரும்
கஞ்சனூர் கஞ்சாறு பஞ்சாக்கையுங் கயிலாய நாதனையே காணலாமே.

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் பாரத்துவாசராசிரமும் பாரிசாதவனமுமாம். இவ்விடத்தில் வசித்திருந்து காலையில் சேதுஸ்நானமும், அர்த்தயாமத்தில் சிதம்பரத்தில் நடராஜ தரிசனமும் செய்துவந்த ஆநந்த மகா முனிவர் ஒருநாள் ஸ்நான முடித்துத்தரிசனத்திற்குச் செல்லுங்கால் பேரிருளும் பெருமழையுமுண்டாகித் தடைநேர வருந்தி அவ்வனத்திலுள்ள ஒரு மரத்தில் சுருக்கிட்டு உயிர்நீங்கத் தொடங்குகையில் நடராஜப்பெருமான் அவர் முகத்திற்குநேரே திருவடியை நீட்டித் தாண்டவஞ்செய்து காத்தருளியது. அத்தாண்டவம் முகமண்டல தாண்டவமென்பர். இப்பொழுதும் நடராஜப் பெருமான் அவ்வகையே விளங்குகின்றனர். மானக்கஞ்சாறநாயனர் அவதரித்துத் தம் குமரி புண்ணியவர்த்தனியின் கூந்தலை மாவிரதவேடமாக வந்த சிவபெருமானுக்குப் பஞ்சவடிக்காக அரிந்துகொடுத்து முத்தியடைந்தது. சுவாமிபெயர் பாரத்துவாசேசர். அம்பிகை கலியாணசுந்தரி ஆநந்தத்தாண்டவசபேசர். பிந்து தீர்த்தம். இதற்கு 12-அத்தியாயமுள்ள வடமொழிப்புராணமிருக்கின்றது. இது ஆனைத்தாண்டாபுரம் என்னும் ரயில் ஸ்டேஷன். அப்பெயர் இப்படிமருவியது. ஆலயம் ஸ்டேஷனுக்கு அரைமைலிலுள்ளது.

## 27-வது சாத்தங்குடி.

### திருநாவுக்கரசுநாயனர் அருளிய திருவாரூர்த் திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நல்லூரே நன்றாகநட்டமிட்டுநரையேற்றைப்பழையாறேபாயவேறிப், பல்லூரும்பலிதிரிந்துசேற்றூர் மீதேபலர்காணத்தலையாலங்காட்டினூடே, இல்லார்ந்தபெரு வேளூர்த்தளியே பேணியிராப்பட்டீச்சரங்கடந்துமணற்கால்புக்கு, எல்லாருந்தளிச்சாத்தங்குடியிற்காணவிறைப்பொழுதிற் றிருவாரூர்புக்கார்தாமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் விசுவநாதர், அம்பிகை விசாலாக்ஷி. சந்நிதிக்கெதிரில் சிவகங்கைதீர்த்தம். இது வைத்தீசுவரன்கோயில் ரயில் ஸ்டேஷனிலிறங்கி திருப்புன்கூரையடைந்தால் ஒன்றரை மைல் தூரத்திலுள்ளது. இதன்வடதிசையில் குறுச்சியும் தென்றிசையில் புலவனூரும் எல்லைகளாயுள. சாத்தங்குடி கிராமம் பெரும்பாலும் தேவஸ்தானத்திற்குரியது.

## 28-வது தண்டந்தோட்டம்

### சுந்தரமூர்த்திநாயனர் அருளிய திருநாட்டுத்தொகை.

திருச்சிற்றம்பலம்.

அண்டத் தண்டத்தி னப்புறத்தாடு மமுதனார்
தண்டந்தோட்டந் தண்டங்குறை தண்டலையாலங்காடு
கண்டன் மூண்டல்கள்சூழ் கழிப்பாலை கடற்கரை
கொண்டல்நாட்டுக் கொண்டல் குறுக்கைநாட்டுக் குறுக்கையே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் பரமேச்சுரர். அம்பிகை பார்வதி. சிவகங்கை தீர்த்தம். பார்வதி பரமேச்சுரர் திருமணக்கோலமாக சுவாமி இடபத்தின்மேல் கையூன்றிநிற்கும் பெரியதோர் தாமிர விக்கிரகமிருக்கின்றது. இத்தலம் கும்பகோணம் ரயில் ஸ்டேஷனிலிருந்து 12-மைல் நாச்சியார்கோயில் கடந்து பேணுபெருந்துறை என்னும் தலத்திற்கு 2-மைலிலுள்ளது.

## 29-வது அணி அண்ணுமலை.

### திருநாவுக்கரசுநாயனர் அருளிய திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

ஓதிமாமலர்கடூவியுமையவள்பங்காமிக்க
சோதியேதுளங்குமெண்டோட்சுடர்மழுப்படையினனே
யாதியேயமரர்கோவேயணியண்ணுமலையுளானே
நீதியானின்னையல்லானினையுமாநினைவிலேனே.

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் திருவண்ணுமலையைப் பிரதக்ஷிணம் வருகையில் 4-மைலிலுள்ளது. கார்த்திகை யுற்சவத்திற்குச்சென்றோரும் கிரிவலஞ் செய்வோருமாத்திரமே தரிசிக்கிறார்கள். திருவண்ணுமலையைத்தரிசிக்க ஏனைக்காலங்களிற் செல்லுவோர் சிலர் அங்கே போகாமல் வந்துவிடுகிறார்கள். அத்திருவண்ணுமலையடி கீழ்ப்புறத்துள்ள ஆலயம் திருவண்ணுமலை இப்போது சொல்லிவரும் மேற்புறத்துள்ள ஆலயம் அணியண்ணுமலையாம். சுவாமிபெயர் அருணசலேசுவரர். அம்பிகை உண்ணுமுலைத்தாய். தீர்த்தம் பலவுண்டு. இத்தலபுராணம் பார்த்தறிக. இதற்கு ரயில் ஸ்டேஷன் திருவண்ணுமலையே.

## 30-வது சோமீச்சுரம் என்பது. சோமநாதர் கோயில்.

### திருநாவுக்கரசுநாயனூர் அருளிய க்ஷேத்திரக்கோவை.

திருச்சிற்றம்பலம்.

நறையூரிற்சித்தீச்சரநள்ளா றுநாரையூர்நாகேச்சரநல்லூர்நல்ல
துறையூர்சோற்றுத்துறைசூலமங்கைதோணிபுரந்துருத்திசோமீச்சரம்
உறையூர்கடலொற்றியூரூற்றத்தூரோமாம்புலியூரோரேடகத்துங்
கரையூர்கருப்பறியல்கன்றாப்பூருங்கயிலாயநாதனையேகாணலாமே.

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் பிருகஸ்பதியும் சந்திரனும் பூஜித்தது. சுவாமிபெயர் சோமீச்சுவரர். அம்பிகை சோமசுந்தரி. தீர்த்தம் பொற்றாமரைக் குளம். மகாமகக்குளம். பொன்னெனும் பெயர்கொண்ட பிருகஸ் பதிக்கு அபசாரப்பட்ட சந்திரன் அபராதக்ஷமா பணஞ் செய்து கொள்ள பிருகஸ்பதியை வணங்கினமையின், மனமிரங்கிய பிருகஸ் பதி, கும்பகோண க்ஷேத்திரத்திற்கு வந்தனர். அப்பொழுது கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களெல்லாமொன்று கூடின. பிருகஸ்பதி அதில் சந்திரனோடு தீர்த்த ஸ்நானஞ் செய்து அவனைப் பரிசுத்தனாக்கினர். அத்தினமாகிய மகநக்ஷத்திரத்தில் பூரண சந் திரனும் பிருகஸ்பதியும் ஒன்று சேர்ந்திருப்பதே மகாமகமெனப் படும். அது பன்னிரு வருஷத்திற் கொருமுறையே வரும். அவர் வந்த காலத்திலேதான் பொற்றாமரைக்குளம் நிர்மிக்கப்பட்டது. பொன்னெனும் அர்த்தமுடைய ஏமமெனும் பெயர்பெற்ற வைணவரொருவர் பிற்காலத்தில் அக்குளக்கரையில் மண்டபஞ் செய்து வசித்திருந்தமையின் அது ஏமபுஷ்கரிணியென வைணவரா லபகரிக்கப்பட்டது. அது கும்பகோணம் ரயில் ஸ்டேஷனுக்கு அரைமைலிலுள்ளது.

(இன்னும் வரும்.)

## சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் 23-வது வருடப் பூர்த்திவிழா.

இவ்விழா 1922ளு ஏப்ரல்மீ 2உ ஆதிவாரம் பகல் 4-மணி தொடங்கி, சென்னை சௌந்தரிய மஹாலில் நடைபெற்றது. ஸ்ரீமான் ஸர். M. C. T. முத்தைய செட்டியாரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். அப்போது திருக்கூட்டத்தின் 1921ளு சபாக்கிரந்தமும் வரவு செலவு கணக்கும் வாசித்து அங்கீகரிக்கப் பெற்றன. சைவ பாடசாலை மாணவர் இருவர் ஆஸ்திக நாஸ்திக வாதம் புரிந்தார்கள. பாடசாலை மாணவர்களுக்குப் புத்தகப் பரிசளிக்கப்பட்டது. சுவாமி வேதாசலம் அவர்கள், முப்பொருளுண்மையை விளக்கி உபந்நியசித்துச் சைவ ஆங்கில பாடசாலைகள் வைத்து அவற்றின் மூலமாய்ச் சிறுவர்களுக்குச் சைவ சமய போதனை செய்வதைக் காட்டிலும் மேலான காரியம் வேறொன்றும் இல்லையென்பதை நன்கு விளக்கினார்கள். ஹைகோர்ட்டு வக்கீலும் மதராஸ் சட்ட சபையினருமாகிய ஸ்ரீமான் யஸ். சோமசுந்தரம் பிள்ளையவர்களும், சென்னை நகரபரிபாலன சபையங்கத்தினர் ஸ்ரீமான் A. C. பார்த்தசாரதி நாயுடு அவர்களும், தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் மணி திருநாவுக்கரசு முதலியாரவர்களும் ஆங்கில பாடசாலைகள் வைத்துச் சைவ சமய போதனை செய்வது இன்றியமையாததென்பதை மிகவும் வற்புறுத்திப் பேசினார்கள்.

அக்கிராசனரவர்கள் தமது மரபினர் செய்யும் அரிய தருமங்களைக் குறிப்பிட்டு, மாணவர் செய்த சம்வாதத்தைப் புகழ்ந்து, சுவாமி வேதாசலம் அவர்கள் செய்த உபந்நியாசத்தைப் பாராட்டி, திருக்கூட்டத்தினர் செய்து வரும் சமயபரிபாலனத்தை மெச்சி, தாம் திருக்கூட்டத்தின் போஷகராயிருக்க அன்புகூர்ந்து இசைந்தார்கள்.

மண்டபம் நிறைய பல கனவான்களும் சீமாட்டிகளும் வந்திருந்தார்கள்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின்

# 23-வது வருடத்துச் சபாக்கிரந்தம்

## 1921ஸ்ரீ

---

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீய தெல்லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

### முன்வருடப் பூர்த்திவிழா.

(1920ஸ்ரீ) 22-வது வருடப் பூர்த்திவிழா, 1921ஸ்ரீ மேமீ 1ஷ நடைபெற்றது. அதின் விருத்தாந்தம் "சைவம்" 7-வது மலர் இரண்டாமிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

### மகா சபையார்.

| | | |
|---|---|---|
| இச்சபையின் 1921ஸ்ரீ ஆரம்பத்திலிருந்தவர்களின் தொகை | | 36 |
| 1921-ஸ்ரீ | சேர்ந்தவர்கள் | 20 |
| ,, | நீங்கினவர்கள் | 8 |
| ,, | முடிவிலிருந்தவர்கள் | 48 |

இவர்கள் பெயர் முதலியன இதினீற்றில் காட்டப்பட்டுள்ளன. இவர்களுள் போஷகராயிருந்த ராவ்பஹதூர் யஸ் இரத்தினவேல் செட்டியாரவர்கள் இவ்வருடம் சிவபதமடைந்தது இச்சபைக்குப் பெரியதோர் நட்டமாயிற்று.

இவ்வருட முதல் சைவ சமயிகள் எல்லோரும் இத்திருக்கூட்டத்திற் சேர்ந்து சைவ சமய பரிபாலனம் செய்யுமாறு தீவிரமான முயற்சி செய்யப்படுகின்றது. இதின் பலனாக கடந்த மூன்று மாதங்களில் 32 அன்பர்கள் நூதனமாகச் சேர்ந்துளார்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1920ஸ்ரீ | சபையார் கொடுத்த மாதசந்தா | ரூபா | 188 |
| 1921 | ஷை | ஷை | 200 |

## Rao Bahadur S. Rathnavelu Chettiar's Saivite Elementary School.

இப்பாடசாலையில் 1920௵ இருந்ததுபோலவே 1921-வது வருடத்திலும் நான்கு வகுப்புகள் இருந்தன. இரண்டு உபாத்தியாயர்களால் தமிழும் ஆங்கிலமும் சைவசமய பாடங்களும் கற்பிக்கப்பட்டன. சென்ற மூன்று மாதங்களின் அபிவிருத்தியை நோக்கி இப்போது மூன்று உபாத்தியாயர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுள் இருவர் போதனா முறை பயின்றவர்கள்.

| | | |
|---|---|---|
| இப்பாடசாலையில் 1921௵ ஆரம்பத்திலிருந்த சிறுவர்களின் தொகை | | 62 |
| ,, ,, சேர்ந்தவர்கள் | | 38 |
| ,, ,, நீங்கினவர்கள் | | 40 |
| ,, ,, முடிவிலிருந்தவர்கள் | | 60 |
| 1920௵ பிள்ளைகள் கொடுத்த சம்பளம் | ரூபா | 145 |
| 1921 ,, ,, | | 184 |
| 1920௵ அரசாங்கத்தார் கொடுத்த தொகை | | 221 |
| 1921 ,, ,, | | 144 |
| 1922 ,, ,, | | 215 |
| 1920௵ செலவான தொகை | | 351 |
| 1921 ,, ,, | | 505 |

இடவசதிக் குறைவால் அதிக பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்ள இயலவில்லை. ஆயினும் கடந்த 3 மாதங்களிற் செய்த முயற்சியின் பயனாக இப்போது 80 பிள்ளைகள் வாசிக்கிறார்கள்.

1921௵ ஜூலைமீ 7௳ அரசாங்கப் பாடசாலை உதவிப் பரிசோதகர் பாடசாலையைப் பரீக்ஷித்தனர்.

ராவ்பஹதூர் யஸ். இரத்தினவேல் செட்டியாரவர்கள் இப்பாடசாலைக்குக் கட்டடம் வாங்கிக் கொடுத்திருப்பதற்காக நிர்வாக சபையார் இவருக்கும் இவர் மனைவியார் குமாரர் முதலிய பந்துக்களுக்கும், இவர் தரும நிர்வாக கமிட்டியாருக்கும் நன்றிபாராட்டி வந்தனமளிக்கின்றார்கள்.

இவர் துன்மதி௵ தைமீ 26௳ (8-2-22) புதன்கிழமை சுக்கில பட்சத்தில் திருமாலுக்குச் சிறந்த ஏகாதசி திதியில் சிவபிராற்கு உகந்த திருவாதிரை நட்சத்திரத்தில் சிவபதமடைந்தார். 1922௵ பிப்ரவரிமீ நடைபெற்ற இவர் உத்தரகிரியை தினத்தில் திருக்கூட்டத்தினரால் இவர்மீது இரங்கற்பா இயற்றி அச்சிட்டுக் கொடுக்கப்பட்டது. வருடந்தோறும் இவர் சிவபதமடைந்த நாளில் பாடசாலையில் இவர்பொருட்டுத் தமிழ்வேதபாராயணமும் சைவப்பிரசங்கமும் செய்து அரைநாள் விடுமுறை யளிக்கவேண்டுமென்று நிர்வாக சபையார் தீர்மானித்துள்ளார்கள்.

வருடோற்சவ காலத்தில் பிள்ளைகளுக்குப் பரிசளித்தற்பொருட்டு Caxton அச்சுக்கூடத் தலைவர் 27 புத்தகங்கள் கொடுத்து உபகரித்தனர்.

இப்பாடசாலைக்கு நிலம்வாங்கிக் கொடுக்க வேண்டி நிர்வாக சபையார் அரசாங்கத்தாரிடம் 1922௵ ஜனவரிமீ 24௳ 3654 ரூபா கொடுத்திருக்கிறார்கள்.

## சைவம்.

இப்பத்திரிகை முன்னே 1915௵ முதல் ஜனவரிமீ தொடங்கி டிசம்பர்மீ இறுதியாக ஒரு புத்தகமாகுமாறு அச்சிட்டு வெளியிடப்பட்டது. 1920௵ அச்சுக்கூடச் சம்பந்தமாக நேர்ந்த தாமதத்தால் 6-வது மலர் பங்குனி மாதத்தில் முற்றுப்பெற நேர்ந்தது. அதனால் 7-வது மலர் தொடங்கி சித்திரைமாத முதல் பங்குனி மாதம் இறுதியாக வெளியிடப்படுகிறது

போதுமான சந்தாதாரர்கள் இல்லாமையால் இருமுறை 24-பக்கங்கள் கொண்ட ஒருமாதப் பத்திரிகையையே இருமாதப் பத்திரிகைகளாக இலக்கமிட்டு வெளியிட நேர்ந்தது. இதற்காக நிர்வாக சபையார் பெரிதும் வருந்துகின்றார்கள். அன்றியும் பத்திரிகைக்குப் போதுமான சந்தாதாரர்களைச் சேர்த்து உதவிபுரியுமாறு இப்போதுள்ள சந்தாதாரர்களை நிர்வாக சபையார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

யாதொரு ஊதியமும் எதிர்பாராது பல வருடங்களாகச் சலிப்பின்றிச் சைவசமயாபிமான மீக்கூர்ந்து இப்பத்திரிகையை நடத்திவரும் ஸ்ரீமான் இருக்கம் ஆதிமூல முதலியாரவர்களுக்குச் சைவ உலகம் எந்நாளும் நன்றி பாராட்டக் கடவதாம்.

| | | |
|---|---|---|
| 1920-௵ பத்திரிகையின் வருடாந்த சந்தாதாரர்கள் | | 790 |
| 1921 | ,, ,, | 480 |
| ஆயுள் சந்தாதாரர்கள் | | 208 |

காகிதவிலை, அச்சுக்கூலி தபாற்கட்டணம் முதலியவை முன்னிலும் அதிகமாகிவிட்டதை நோக்கிப் பத்திரிகையின் சந்தா ஒரு ரூபாவிலிருந்து ஒன்றரை ரூபாவாக உயர்த்தப்பட்டதே 1921௵ சந்தாதாரர்கள் குறைந்தமைக்குக் காரணமாம்.

| | | |
|---|---|---|
| 1920-௵ பத்திரிகையினால் வரவு முன்வருடப் பத்திரிகை விற்பனை வரவோடு | | ரூபா 1003 |
| 1921 | ,, ,, | 790 |
| 1920௵ | ,, செலவு | 590 |
| 1921 | ,, ,, | 1105 |

1920௵ பத்திரிகையின் கடைசி இதழ்கள் சில முற்கூறியபடி 1921௵ அச்சிட நேர்ந்தமையும், 1921 வருடத்தில் தபாற்கட்டணம்

அதிகரித்தமையும் 1920ஆம் செலவு குறைந்தும் 1921ஆம் செலவு அதிகரித்தும் இருத்தற்குக் காரணங்களாம்.

## வட திருமுல்லைவாயில் வசந்த மகோற்சவம்.

இம்மகோற்சவம் துன்மதிஆம் வைகாசிமீ 9உ (1921ஆம் மேமீ 22உ) மிகச் சிறப்பாய் நடத்தப்பெற்றது. காலையில் உருத்திராபிஷேகமும் பகலில் மாகேசுர பூசையும் இரவில் உற்சவமும் நடைபெற்றன.

இம்மகோற்சவத்தைச் சுமார் நாற்பது வருடங்களாக பல அன்பர்கள் கூடி மிகவும் ஆடம்பரமாகச் செய்து கொண்டிருந்தார்கள். ஆயிரக்கணக்கான அன்பர்கள் சென்று மகோற்சவ தரிசனம் செய்வது வழக்கமாயிருந்தது. முன் நடத்துவித்தவர்கள் நீங்கிவிட்டமையாலும் சென்னைமா நகருக்கருகிலிருக்கும் இத்தலத்தில் இம்மகோற்சவம் வழக்கப்படிச் சிறப்பாய் நடைபெறுதொழிதல் தகுதியன்றாகையாலும், இச்சபையில் இதனை நடத்துவிக்கப் போதுமான பொருளில்லாதிருந்தும், நிர்வாக சபையார் பல அன்பர்களின் உதவியைக்கொண்டு நடத்துவிக்கத் துணிந்து இச்சிவ கைங்கரியத்தை பேற்றுக்கொண்டார்கள். ஆயினும், இதன்பொருட்டுக் கிடைத்த பொருளுதவி ரூபா 60. நேரிட்ட செலவோ ரூபா 334. ஆனால் அடுத்த வருடத்தில் உதவி செய்யப் பலர் வாக்களித்திருக்கிறார்கள்.

இவ்வுற்சவத்தைப் பிரயாசை யெடுத்துக்கொண்டு முன்னின்று நடத்தி உதவி புரிந்த ஸ்ரீமான் ஆரணி முருகேச முதலியாரவர்களுக்கும், அபிஷேகத்திரவிய முதலியன கொடுத்துபகரித்த ஏனைய அன்பர்களுக்கும், தீபாலங்காரத்திற்கென மாண்டலேயிலிருந்து 10 ரூ அனுப்பிய முனிசிபல் ஆபீஸ் ஹெட் ட்ராப்ட்ஸ்மேன் ஸ்ரீமான் சு. சுப்பராய முதலியாரவர்களுக்கும் நிர்வாக சபையார் நன்றி பாராட்டி வந்தனமளிக்கின்றார்கள். இதற்காகச் செய்யப்பெற்ற உதவிகள் அடுத்த வருடத்து மகோற்சவப் பத்திரிகையில் விவரமாகக் காட்டப்படும்.

## கூட்டங்கள்

1921ஆம் நிர்வாக சபையார் 9 முறை கூடினார்கள், மூன்று மகாஜனக் கூட்டங்கள் கூடின.

முதலாவது மகாஜனக் கூட்டம் மேமீ 1உ சைவ பாடசாலையில் கூடிற்று. அப்போது ஸ்ரீமான் தி. த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள் B.A., அக்கிராசனம் வகித்தார்கள். திருக்கூட்டத்தின் 22-வது வருடப் பூர்த்திவிழா நடைபெற்றது.

இரண்டாவது மகாஜனக் கூட்டம் அக்டோபர்மீ 16உ பச்சையப்ப முதலியார் கலாசாலை மண்டபத்தில் கூடிற்று. அப்போது தருமபுர ஆதினம் ஸ்ரீலஸ்ரீ - தரு. சண்முகத்தம்பிரான் சுவாமிகள் அக்கிரா

சனம் வகித்தார்கள். மதபோதனையைப்பற்றிய உபந்யாசங்கள் செய்யப் பெற்றன.

இரண்டாவது மகாஜனக் கூட்டம் சௌந்தரிய மஹாலில் அக்டோபர்மீ 23உ கூடிற்று. அப்போது பிரமஸ்ரீ திவான் பஹதூர் பார்த்தசாரதி ஐயங்காரவர்கள் M A., M.L, அக்கிராசனம் வகித்தார்கள். டாக்டர் கௌர் விவாக மசோதாவைக் கண்டனஞ் செய்வதாக அரசாங்கத்தினர்க்கு அறிவிக்கப்பட்டது

## வரவு செலவு கணக்கு.

1921ஷ வரவு செலவு கணக்கு M. & S. M Ry. Accountant ஸ்ரீமான் கூடலூர் சிவ வாசுதேவ முதலியாரவர்களால் பரிசோதிக்கப்பெற்று இதினீற்றில் சேர்க்கப்பட்டுள்ளது.

## சாது அச்சுக்கூடம்.

இவ்வச்சுக்கூடத் தலைவர் இத்திருக்கூட்டத்தின் காரியங்களைத் தமது சொந்த காரியமாக மதித்து வேண்டியவைகளை யெல்லாம் வேண்டியவாறே சிறிதும் சலிப்பின்றி அச்சிட்டுபகரிப்பதோடு பற்பல சமயங்களில் பல பத்திரிகைகளை இலவசமாகவும் அச்சிட்டு உபகரித்தார்கள்.

## பிரார்த்தனை.

கிறிஸ்து பாதிரிமார்கள் செய்யும் அளவுபடாத முயற்சிகளாலும், மேலைத் தேச நாத்திக நாகரிகப் பிரவேசத்தாலும், பிரமஞான போதினி சபை, பிரமசமாஜம், ஆரிய சமாஜம், புத்தமத சங்கங்கள் முதலியன செய்து வரும் வேலைகளாலும், சைவசமயிகளின் பராமுகத்தாலும் இப்போது சைவசமயம் மிகவும் குன்றிக்கிடப்பதாயிற்று. இன்னும் சைவசமயிகளாகிய நாம் பராமுகமாயிருந்தால் மிகவும் ஆபத்தாய் முடியும். ஆதலால் சைவசமயிகள் எல்லோரும் இத்திருக்கூட்டத்தில் சேர்ந்து பல வழிகளில் சமய பரிபாலனம் செய்யுமாறு நிர்வாக சபையாரால் தீவிரமான முயற்சிகள் செய்யப்படுகின்றன. இம்முயற்சியின் பலனாக கடந்த ஒரு மாதத்தில் பல அன்பர்கள் திருக்கூட்டத்திற் சேரப் பெற்றார்கள். இன்னும் ஒரு வருடத்திற்குள் ஆயிரம் அன்பர்களுக்கு அதிகமாகவே சேரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திருக்கூட்டத்திற்கு உதவி புரிந்து சைவசமய பரிபாலனம் செய்பவரும் செய்விப்பவருமாகிய அன்பர்களியாவரும் ஸ்ரீசிவகாமசுந்தர நடராஜப் பெருமானாரின் திருவருளால் சகலைஸ்வரியசம்பன்னராய் நீடூழி வாழ்கவெனப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்:

சென்னை. } உத்திரவின்படி காரியதரிசி.

12—3—22 } இ. ஆதிமூல முதலியார்.

## சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின்
## 1921௵ வரவு செலவுக் கணக்கு

### வரவு

| | | | | ரூபா | அ | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1921௵ ஜனவரி௴ 1௳ இருப்பு | | | | 2461 | 11 | 6 |
| திருக்கூட்டத்தார் மாதசந்தா | | | | 200 | 0 | 0 |
| திருமுல்லைவாயில் வசந்தோற்சவ நன்கொடை &c, கிடைத்த சமான்களின் மதிப்பு உட்பட | | | | 60 | 5 | 0 |
| வட்டி | | | | 95 | 9 | 8 |
| புத்தக விற்பனை | | | | 2 | 14 | 3 |
| **சைவ பாடசாலை** | | | | | | |
| பிள்ளைகள் சம்பளம் | 184 | 0 | 0 | | | |
| நன்கொடை | 15 | 0 | 0 | | | |
| அரசாங்க உதவி | 144 | 0 | 0 | 343 | 0 | 0 |
| தையல் இயந்திர விற்பனை வரவு | | | | 99 | 10 | 0 |
| சைவப் பத்திரிகை வருடாந்தச் சந்தாவும், முன் வருடப் பத்திரிகையின் விற்பனை வரவும் | | | | 790 | 10 | 0 |
| மொத்தம் | | | | 4054 | 12 | 5 |
| அடுத்த பக்கத்திற் காட்டியபடி செலவு | | | | 3172 | 11 | 0 |
| 1921௵ டிசம்பர்௴ 31௳ இருப்பு | | | | 882 | 1 | 5 |
| இதனோடு வட்டிக்கு விடப்பட்டிருக்கும் தொகையும் சேர்ந்த இருப்பு | 1953 | 1 | 5 | | | |

## சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் 1921ஆம் வரவு செலவுக் கணக்கு

### செலவு

| | ரூபா | அ. | ப. | ரூபா | அ | ப. |
|---|---|---|---|---|---|---|
| சைவபாடசாலை உபாத்தியாயர்கள் சம்பளம் | 433 | 14 | 11 | | | |
| " வேலையாட்கள் | 39 | 0 | 0 | | | |
| " இதர செலவுகள் | 32 | 4 | 6 | 505 | 3 | 5 |
| சைவப் பத்திரிகை காகிதம் | 321 | 1 | 0 | | | |
| " தபால் | 271 | 11 | 0 | | | |
| " அச்சுக்கூலியும் கட்டடமும் | 270 | 11 | 0 | | | |
| " லிகிதர் சம்பளம் | 170 | 10 | 7 | | | |
| " வாடகை | 48 | 0 | 0 | | | |
| " இதர செலவுகள் | 23 | 6 | 6 | 1105 | 8 | 1 |
| **திருமயிலைவாயில் வசந்தோற்சவம்** | | | | | | |
| உருத்திராபிஷேகம், வஸ்திரம், சேலை, மண்டபடி, வேத பாராயணம் தீபாலங்காரம் முதலியன | 85 | 9 | 6 | | | |
| வாத்தியம் | 23 | 0 | 0 | | | |
| புஷ்பம் | 20 | 0 | 0 | | | |
| பந்தல் | 12 | 4 | 0 | | | |
| வாஷிங்டன் விளக்குகள் | 19 | 0 | 0 | | | |
| மாகேசுர பூஜை | 138 | 15 | 9 | | | |
| வண்டி சத்தம், ஆட்கள் சுமைகூலி, விளம்பரப் பத்திரிகை முதலியன | 38 | 2 | 0 | 336 | 15 | 3 |
| தண்டற்காரர் | | | | 45 | 0 | 0 |
| சபாமண்டப வாடகை | | | | 14 | 8 | 0 |
| மகாஜனக் கூட்டங்கள் | | | | 48 | 10 | 0 |
| காகிதம், ரசீது புத்தகங்கள், தண்டற் புத்தகங்கள் முதலியன | | | | 45 | 14 | 3 |
| மொத்தம் | | | | 2101 | 11 | 0 |
| வட்டிக்குக் கடனாகக் கொடுக்கப்பட்டது | | | | 1071 | 0 | 0 |
| ஆக மொத்த செலவு | | | | 3172 | 11 | 0 |

கணிதபரிசோதகர். — காரியதரிசி.

கூ. சிவ வாசுதேவ முதலியார். — இ. ஆதிமூல முதலியார்.

## சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் நிர்வாக சபையார்.

### சபைத் தலைவர்.

ஸ்ரீமான் ச. இராஜாகண்ணு முதலியாரவர்கள், B. A.
Retired Supt. அக்கவுண்டண்டு ஜெனரல் ஆபீஸ்.

### உதவி சபைத்தலைவர்.

" தி. த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள், B. A.
கவர்ன்மெண்ட் பென்ஷனர்.

### காரியதரிசி.

" இ. ஆதிமூல முதலியாரவர்கள். ஷை

### உதவிக் காரியதரிசி.

" இ. கண்ணப்ப முதலியாரவர்கள், வர்த்தகர்.

### பாடசாலை விசாரணைக்கர்த்தர்.

" ரெ. சண்முக முதலியாரவர்கள்,
கிளார்க்கு, பாரி அண்டு கம்பெனி.

### அத்தியட்சர்கள்.

" திரு. சபாபதி முதலியாரவர்கள், ரிடைர்ட் சப் இஞ்ஜினீர்.
" ஆர். பி. துரைசாமி முதலியாரவர்கள்,
கவர்ன்மெண்ட் பென்ஷனர்.
" வா. தி. கோவிந்தராஜ முதலியாரவர்கள்
கிளர்க்கு, லெஜிஸ்லேடிவ் கவுன்சில் ஆபீஸ்.
" திருவூர் தியாகராஜ முதலியாரவர்கள்
கிளர்க்கு, அக்கவுண்டாண்டு ஜெனரல் ஆபீசு.
" குப்புசாமி முதலியாரவர்கள், கிளர்க்கு,
ரெயில்வே மெயில் சர்விஸ்.
" கழுக்குணம் கணபதிசாமி முதலியாரவர்கள்
ஹெட் கிளர்க்கு சீப் ஆடிட் ஆபீஸ் யம் யஸ். யம். ரெயில்வே.
" ந. அப்பாதுரை முதலியாரவர்கள், ஸப்போஸ்ட் மாஸ்டர்

### கணித பரிசோதகர்.

" கூடலூர் சிவவாசுதேவ முதலியாரவர்கள்,
அக்கவுண்டாண்டு, எம். எஸ். எம். ரெயில்வே.

## சாமாசிகர் (அங்கத்தினர்.)

ஸ்ரீமான் ராவ்பஹதூர் எஸ். இரத்தினவேல் செட்டியாரவர்கள் துவிபாஷிகர், மெஸ்ஸர்ஸ் பெஸ்ட் அண்டு கோ.

„ வி. முத்தையா பிள்ளையவர்கள் வர்த்தகர், சென்னை.

„ ஆர். காசி விஸ்வநாத முதலியாரவர்கள் Honorary Magistrate. பொடி புகையிலை வர்த்தகர், சென்னை.

„ திரு. சபாபதி முதலியாரவர்கள் ரிடைர்ட் சப் இஞ்சினீர், தங்கசாலை வீதி சென்னை.

„ வி. மாசிலாமணிப் பிள்ளையவர்கள் B A., B L., ஐகோர்ட் அப்பிஷியல் ரெவ்ரீ.

„ சி. தருமலிங்க முதலியாரவர்கள், கண்ட்ராக்டர்.

„ கா. ரா. நமசிவாய முதலியாரவர்கள் மேரியரசி மாதர் கலாசாலை போதகாசிரியர்.

„ மயிலை. முருகேச முதலியாரவர்கள். கவர்ன்மெண்டு பென்ஷனர்.

„ எஸ். விநாயக முதலியாரவர்கள், B. A. அக்கவுண்டாண்டு ஜெனரல் ஆபீஸ் சூபரிண்டெண்டாண்டு.

„ பி. லோகநாத முதலியாரவர்கள், புரசை.

„ கோ. ஆறுமுக மேஸ்திரியவர்கள். உதகமண்டலம்

„ பெங்களூர் நாகரத்தினம்மாள் அவர்கள், சங்கீத பண்டிதை.

„ திருமணம் அண்ணாமலை முதலியாரவர்கள், ஜமீன்தாரர்.

„ பி. எம். முருகேச முதலியாரவர்கள், காக்ஸ்டன் அச்சுக்கூடம்.

„ சி. கன்னைய நாயுடு அவர்கள், காக்ஸ்டன் அச்சுக்கூட அதிபர்.

„ முத்துசாமி முதலியாரவர்கள், மதராஸ் பாங்கி முருகேச முதலியார் குமாரர்.

„ ஆரணி. முருகேச முதலியாரவர்கள், ராயபுரம் Goods Shed Supr.

„ வே. நேத்திரசிகாமணி முதலியாரவர்கள், ஸப்போஸ்டு மாஸ்டர்.

„ அம்பலவாண முதலியாரவர்கள், கிராம்டன் அண்டு கோ.

ஸ்ரீமான் தி. சந்திரசேகர முதலியாரவர்கள்,
ப்ரோப்ரைட்டர், சந்திரா அண்டு கோ.

" பார்த்தசாரதி முதலியாரவர்கள், வெற்றிலை வியாபாரம்.

" சி. தட்சிணாமூர்த்திப் பிள்ளையவர்கள்
நாட்டுப்பிள்ளையார் கோவில் வீதி, சென்னை.

" சி. இராஜரத்தின முதலியாரவர்கள்
கிளார்க்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜனரல் ஆபீஸ்.

" வி. யம். நடராஜ முதலியாரவர்கள்
பாடசாலை உபாத்தியாயர்.

" சி. ராசு நாயுடு அவர்கள், பென்ஷனர்.

" ப. வேலு முதலியாரவர்கள், அருணாசலமுதலி வீதி, சென்னை.

" சி. இரத்தின முதலியாரவர்கள்
யம். எஸ். எம். ரெயில்வே ஏஜெண்டு ஆபீஸ்.

" கே. யஸ். குப்புசாமி செட்டியாரவர்கள், வர்த்தகர்.

" சிவப்பிரகாச முதலியாரவர்கள், கிளார்க்கு கேபில் ஆபீஸ்.

" சோமசுந்தர முதலியாரவர்கள்
45, கோவிந்தப்ப நாய்க்கன் வீதி, சென்னை.

" C. சீனிவாச முதலியாரவர்கள்
சிக்னல்லர் மண்ணடி போஸ்டாபீஸ்.

" வி. வரதராஜுலு நாயுடு அவர்கள்
ஸ்டாம்பு வெண்டர் மதராஸ் போஸ்டாபீஸ்.

" P. கிருஷ்ணராவ் அவர்கள், மண்ணடி போஸ்ட் மாஸ்டர்.

" சி. கேசவ முதலியாரவர்கள்
கிளார்க்கு, மண்ணடி போஸ்டாபீஸ்.

" யம். பத்மநாப முதலியாரவர்கள் ஷை.

" பூ. ஆறுமுக முதலியாரவர்கள்
14, தியாகராயப்பிள்ளை வீதி, சென்னை.

" மா. முனிசாமி முதலியாரவர்கள், டைப்பௌண்டர்,
வடமலை மேஸ்திரிவீதி, மதராஸ்.

# சைவக்கிரியாதிகார நிரூபணம்

## தூத்துக்குடி சைவசித்தாந்த சபை பிரசுரம்

கடல் சூழ்ந்த இப்பூவுலகத்தின் கண் எண்ணிறந்த சமயங்களிருக்கின்றன. அவ்வச்சமயங்களுக்கும் பொது நூலாகவும், சிறப்பு நூலாகவும் பல சமய சாஸ்திரங்களும் ஏற்பட்டிருக்கின்றன. அவ்வச்சமயங்களைப் பரவச்செய்த ஆசார்ய பரம்பரையிலுள்ள குருமார்களும் இருக்கின்றனர். ஒவ்வொரு சமயிகளும் தங்களுடைய சுபாசுபக் கிரியைகளைத் தங்கள் சமய சாஸ்திரப்படி தங்கள் தங்கள் ஆசிரியர்களைக்கொண்டே செய்துவருகின்றார்கள். அப்படியிருக்க, சமயங்களெல்லாவற்றையுந் தன்னுள்ளடக்கித் தான் ஒன்றினுள்ளும் அடங்காது சமைய அரசாய் விளங்கும், சைவ சமயிகளாகிய நாமட்டும் அன்னிய சமயிகளாகிய ஸ்மார்த்த சமய புரோகிதர்களைக்கொண்டு நம்முடை பூர்வ அபரக் கிரியைகளைப் பெரும்பான்மையும் நடத்திவருகின்றோம். இப்படிப்பட்ட அனுசார நடை, நம்மாற்றூழ்ந்த சமயிகளென ஒதுக்கப்பட்ட கிறிஸ்தவர், மகமதியர் முதலினோரிடத்துங் காணப்படவில்லை. எப்படியெனில் கிறிஸ்தவர்கள் மகமதியர்களைக் கொண்டாவது, மகமதியர்கள் கிறிஸ்தவர்களைக் கொண்டாவது யாதொரு கிரியையுஞ் செய்யக் கண்டிலம். இன்னும் ரோமான்காதலிக்குக் கிறிஸ்தவர்களும், புரோடஸ்டாண்டுக் கிறிஸ்தவர்களும் ஒரே மதஸ்தராயிருந்தும் ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினர்களைக்கொண்டு எந்தக் கிரியையுஞ் செய்யக் கண்டிலம். அது நிற்க.

நமது வேதங்களை ஆதாரமாகக்கொண்ட சமயங்கள் பலவற்றுள்ளும் தற்காலஞ் சிரேஷ்டமாய் விளங்குஞ் சைவ வைஷ்ணவ ஸ்மார்த்த மாத்துவமென்னும் நான்கு சமயங்களினுள்ளும் ஸ்ரீமந் நாராயண மூர்த்தியையே பரம்பொருளெனக் கொண்ட வைஷ்ணவரும், மாத்வருமாவது ஒருவரால மற்றொருவர் எந்தக்கிரியைகளையாவது செய்யப் பார்த்திருக்கின்றீர்களா? இன்னும் வைஷ்ணவருள்ளும் வடகலையாருந் தென்கலையாரும் ஒரே மதஸ்தர்கள் தானே, அவர்களாவது ஒருவரைக்கொண்டு மற்றொருவர் எந்தக் கிரியையாவது செய்து வருகின்றனர்களா? நம்மை ஏமாற்றி நமது கிரியைகளைச் செய்து வரும் ஸ்மார்த்த சமயிகளாவது தங்கள் சுபாசுபக்கிரியைகளைச் சைவ வைஷ்ணவ மாத்துவப் பிராமணர்களைக்கொண்டு செய்கின்றார்களா? இல்லையே! இப்படியெல்லா

மிருக்க, நாம் மட்டும் முறைபிறழ்ந்து அன்னிய சமயிகளைக்கொண்டு நமது சுபாசுபக்கிரியைகளைச் செய்து வர என்ன அவசியம் நேரிட்டது? நமக்குச் சமயசாஸ்திரமில்லையா? அம்முறைப்படி நடத்துஞ் சமயாசாரியர்களில்லையா? மற்றவர்களுக்குள்ள சமையாபிமானமில்லையா? அல்லது நமது சமய சாஸ்திரங்கள் அன்னிய சமயிகளைக் கொண்டு செய்யலாமென விதித்திருக்கின்றதா? இல்லையெனின், ஏன் விதி கடந்து செய்யவேண்டும். அது நிற்க.

சைவ சமயிகளாகிய நமது கிரியைகளை ஸ்மார்த்த சமயிகளாகிய புரோகிதர்கள் செய்வது வேத விதிப்படியா? அல்லது ஆகம விதிப்படியா? வேத விதிப்படி யென்னில், வேதாதிகாரமில்லாத வருணத்தார்க்குப் பொருந்தாது. வேதாதிகாரமுள்ளவர்களும் சிவதீக்ஷையுடையவராயின் ஆகமவிதியைத் தழுவாமல் வேத விதிப்படி செய்ய விதியில்லை. அதனை "மறையவர் முன் மூவர்க்குந் தீக்கையுண்டேல் வைதிகந் தாந்திரம் விரவிவருத்தலாகு, மறைதருதாந்திர மொன்றுற் புரிதருனு மமையு மருட்டீக்கையிலதாயின் வேத, முறையுளிச் செய்திடன் முறையாம் பின்னேன் றீக்கை முற்றினனேலாகமத்தான் முடித்தலேயா, நிறைதரு தாந்திரத்தியற்றுனயிற்றீக்கை நெடும்பயனின்றுந்தீக்கை நிகழ்ந்துளார்க்கே." என்பதனால் அறிக. அற்றேல் ஆகமவிதிப்படி செய்வார்களென்னில் சிவாகமங்கள் உம்அ-ல் ஒன்றாகிய சுப்பிரபேதத்தில்.

### சுலோகம்

"சுத்தசைவமிதர்தந்த்ரம் நதேயம்நப்ரகாஸயேத்
தீக்ஷிதஸ்யது தீரஸ்யஸிவபக்திபரஸ்யச
ஸ்ராவணீயம் நசான்யத்ரகதாம்நஹிப்ரஸஸ்யதே."

என்பதனல் சிவதீக்ஷையில்லாதவர்கள் சிவாகமங்களைத் தொடக்கூடாதென்றும், கேட்கக் கூடாதென்றும் ஏற்படுகின்றது. சிவாகமங்களைத் தொடுதற்கும் அதிகாரமில்லாத ஸ்மார்த்தப் புரோகிதர்கள், ஆகமவிதிப்படி எப்படிக்கிரியை செய்யக்கூடும்? ஒருகால் விதிகடந்து ஆகமக்கிரியைகளைக் கற்றுச் செய்ய வந்தாலும் நாம் உடன் படலாமா? உடன்படுவோமானல் குளிக்கப் போய்ச் சேறு பூசிக்கொள்வது போல அந்தக் கிரியையினல் வரும் புண்ணியத்தையிழந்து பாவத்தையன்றே தேடிக்கொள்வோம். வருந்தித்தேடிய பொருளைக்கொடுத்து நரகத்தைத் தரத்தக்க

பாவத்தையா தேடவேண்டும்? கடவுளுமில்லை; புண்ணியபாவமுமில்லை, மோட்சநரகமுமில்லை யென்று சொல்லும் நாஸ்திகரானால் ஒன்றையுங் கவனிக்கவேண்டியதில்லை. நாம் கடவுள் உண்டென்று கூறும் ஓர் சமயத்தை ஒப்புக்கொண்டவர்களா யிருத்தலால் அச்சமய சாஸ்திர விதிக்கு அடங்கி நடக்கவேண்டுமல்லவா? சாஸ்திர முறைப்படி நடக்க முடியுமாவெனச் சிலர் ஆக்ஷேபிக்கக் கூடும். நடத்த முடியாமற் போனது போக, நடத்துங் கிரியைகளையாவது சாஸ்திரயுக்தமாய் நடத்தவேண்டுமல்லவா? அதுவன்றி எந்த மதஸ்தரானலுஞ் சரி பிராமணராயிருந்தாற் போதும் என்றால் கிறிஸ்தவர் மதத்திற் சேர்ந்த பிராமணர்கள் மட்டும் ஏன் விலக்காய்ப் போனர்களோ தெரியவில்லை. அவர்கள் மதுமாமிச போஷணிகளாயிருத்தலால் கூடாதென்பார்போலும். ஆனல் நமது சமய சாஸ்திரம் பிராமணர்களாயிருந்தால் மட்டும் போதுமென்று கூறுது, சிவசமஸ்காரம்பெற்ற பிராமணர் முதலினோர்களை உயர்த்தியும், அச்சமஸ்காரம் பெறுத பிராமணர் முதலியோர்களைத் தாழ்த்தியுமே கூறுகின்றது

நம்மைப்போல விபூதிருத்திராக்ஷ தாரணிகளாய்ச் சிவசேவை செய்து வரும் புரோகிதர் முதலினோரை அன்னியசமயிகளென்று சொல்லலாமாவெனச் சிலர் கேட்கக்கூடும். அது நதி நீரைப்போலவே கடல் நீரும், குளிர்ந்த பரிசமும், வெண்மை வர்ணமும் உடையதாயிருப்ப, கடல் நீரை உவர்நீரென்று எப்படிச் சொல்லலாமென்று கேட்குங் கேள்வியையே நிகர்க்கும். நதி நீருக்குங் கடனீருக்கும்பரிசதோற்ற வொற்றுமை யிருப்பினும் சுவையில் வேற்றுமையிருப்பது போல் சைவருக்கும் ஸ்மார்த்தருக்கும் வேற்றுமை யாதெனிற் கூறுதும்.

(க) நாம் வேதங்களை ஈசுவரவாக்கியம் என்போம்.

அவர்கள் அநாதியே உள்ளது என்பார்கள்.

(உ) நாம் சிவபெருமானல் கொடுக்கப்பட்ட சிவாகமங்கள் உ-மே வேதத்தின் உண்மைத் தாற்பரியத்தை விளக்கி முத்தி சாதனேபாயத்தைப் போதிக்கும் உண்மை நூலென்போம்.

அவர்கள் ரிஷிகள் வாக்கியமாகிய பதினெண்ஸ்மிருதிகளே அத்தகைய பிரமாண மென்பார்கள்.

(ந) நாம் பதி பசு பாசம் (சிவ சீவ பந்தம்) ஆகிய மூன்று பதார்த்தங்களும் அநாதி நித்திய மென்போம்.

அவர்கள் பதியொன்றே உள்ளது பசு பாசம் காலத்திரயத்தும் இல்லாதது என்பார்கள்.

(ச) நாம் வியாசராற் செய்த வேதாந்த சூத்திரத்துக்கு ஸ்ரீமத் நீலகண்ட சிவாசாரியர் இயற்றிய நீலகண்ட பாஷ்யமே வேத சிவாகமங்களை விரோதியாத உத்தம பாஷ்யமென்போம்.

அவர்கள் வேதாந்த சூத்திரத்திற்கு சிவாகமத்தோடு முரண்படச் சங்கராசாரியரியற்றிய சங்கரபாஷ்யத்தையே சிறந்ததென்பார்கள்.

(ச) நாம் வேதத்தில் விதந்தோதப்படும் அத்துவித சப்தத்திற்கு ஒன்று மல்ல இரண்டுமல்ல அதாவது வஸ்துவினுல் ஒன்றல்ல, கலப்பினுலிரண்டல்ல என்று பொருடரும் அன்மைப் பொருள் கொள்வோம்.

அவர்கள் பிரமத்தைத் தவிர இதர பதார்த்தங்கள் (சகஜீவபரங்கள்) காலத்திரயத்துங் கிடையாதெனப் பொருடரு மின்மைப் பொருள் கொள்வார்கள்.

(ரு) நாம் சமய, விசேஷ, நிர்வாண தீக்ஷைகளைப் பெற்றுச் சரியை கிரியை யோகஞான நெறியில் நிற்றலே, சிவ சாலோக, சாமீப, சாரூப, சாயுச்ய பதவிகளைப் பெறுவதற்குத் தக்கசாதனமெனக் கொண்டொழுகுவோம்.

அவர்கள், "சுவர்க்கம் வேண்டினேன் சோதிட்டோமத்தான் வேட்க" என்றபடி சாமான்ய பதவியாகிய சுவர்க்க வாழ்வையே தரவல்ல யாகாதி கிர்த்தியங்களையே தக்கசாதனமெனக் கொண்டொழுகுவார்கள்.

(சா) நாம் தீக்ஷையாதி மந்திரோபதேசங்களை ஆசிரியரிடத்திற் பெற்றுக் கொள்வதே விதியெனக் கொண்டொழுகுவோம்.

அவர்கள், காயத்திரியாதி மந்திரோபதேசங்களைப் பிதாவினிடத்திற் பெற்றுக் கொள்வதே விதியெனக்கொண்டொழுகுவார்கள்.

இவைபோன்ற வித்தியாசங்கள் இன்னும் பலவுள. அவையெல்லாம் விரிவஞ்சி விடுக்கப்பட்டன.

இவைகளைச் சற்று ஊன்றி விசாரிப்பார்க்கு ஸ்மார்த்தப் புரோகிதர்கள், சிவாகம சம்பந்தமான தீக்ஷையாதி சைவச சமஸ்காரம் பெறுதவர்களென்பதும், அதனுலவர்கள் சைவசமயிகளுடைய சுப அசுபக்கிரியைகளை நடத்துவதற்கு எட்டுணையும்

அதிகாரிகளல்ல ரென்பதும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். இது நிற்க.

இப்புரோகிதர்கள், சதாசிவ மூர்த்தியின் திருமுகத்தில் உற்பவித்து அம்முதல்வனால் தீக்ஷை செய்யப் பெற்றவரும் உபதேச காண்டத்தில் "த்வம்ஹிலோககுரு" எனவும் "ததாத்வம்க்ருபயாவித்வங் குருலோககுருர்யத" எனவும் அகஸ்தியமகாமுனிவரால் சகத்குரு வென்று புகழப்பெற்றவரும், ஆகமாதி சைவ சாஸ்திரங்களெல்லாம் ஆதிசைவாசாரியரெனக் கொண்டாடப் பெற்றவருமாகிய நம்பிமாரையடைந்து, விதிப்படி சமய விசேஷ நிர்வாண தீக்ஷையும் பெற்று, ஆசாரிய அபிஷேகமும் பெற்றுக் கொள்வார்களேயானால் ஆதிசைவரல்லாத மற்ற வருணத்துச் சைவசமயிகளின் சுபாசுபக்கிரியைகளை நடத்தும் அதிகாரமுடையவராவரென்பதில் எங்களுக்கு ஒரு சிறிதும் ஆக்ஷேபனையில்லை. இல்லை. இனி நம்மவருட் பலர் இப்புரோகிதர்களது சமயமின்னது, அதன் கொள்கையின்னது என்றறியாமல் வெளுத்ததெல்லாம் பால், கருத்ததெல்லாம் விஷம் என்று கொள்வாரைப்போல் விபூதி உருத்திராக்க தாரணஞ் செய்வதையும், சிவாலய சேவை செய்வதையுங் கண்டு, அவர்களையும் சைவசமயிகளெனவேமதித்து, அவர்களைச் சைவக்கிரியைக்கு அதிகாரிகளல்லரெனவிலக்கும் எம்போல்வாரை மிகக்குறை கூறி வருகின்றார்கள். அவர்கள் இதனைக் கண்ணுற்ற பின்னராயினும் அங்ஙனங் குறை கூறுகின்றதை யொழித்து அப்புரோதர்களைச் சிவதீக்ஷையாதி சைவ சமஸ்காரங்களைப் பெறச்செய்து சைவாசாரியர்களாக்கியே அவர்களால் சுபாசுபக்கிரியைகளை நடப்பிப்பார்களெனவும், அன்றெனில் அன்னோரை விலக்கி நம்மவர்க்குரிய சைவாசாரியரைக் கொண்டே அக்கிரியைகள் யாவும் செய்விப்பார்களெனவும் நம்புகின்றோம். ஆனால், இவர்கள் பிராமண குலத்தவர்க்கு வைதிக சமஸ்காரமே போதும், சைவசமஸ்காரம் அனாவசியமெனவொரு காற் சொல்லவுங்கூடும். அத்தகையோரைப் பின்னர்க் கூறப்படும் பிரமாண வாக்கியங்களைச் சிறிது கவனிக்குமாறு வேண்டுகின்றோம். அவை வருமாறு :—

சுலோகம்

சதுர்வேததரோவிப்ரோ சிவதீக்ஷாவிஹீநகம்
தஸ்யஅஸ்தந்துபுக்த்வாது புனர்த்தீக்ஷாஞ்சமாசரேத்

செய்யுள்

"முச்சந்தியுடனுதயமத்தமனகால
முன்னுணவின்முன்பின்னுமுறங்குமுன்னும்பின்னும்
அர்ச்சனையின்முன்பின்னுமலசலங்கள்விட்டா
லாசமித்தபின்னுமதீக்ஷிதர்தொட்டாலும்
பொச்சவர்கண்மாற்சாலங்கொக்கெவிகண்முதலாப்
பொல்லாததீண்டிடினும்புனிதநீறணிக
நிச்சயமேசிவனங்கிகுருவித்தைமுன்னு
நீசர்முன்னும்நடவையினுமணியற்கநீறே."

மேற் கூறிய சுலோகத்தில் நான்கு வேதங்களையும் அத்தியயனஞ் செய்த வேதியனாயிருந்தாலுஞ் சிவதீக்ஷை பெறாதவனாயிருந்தால் அவனிடத்திலே புசித்தவன் மறுபடியுஞ் சிவதீக்ஷை பெற வேண்டுமென்றும், செய்யுளிலே தீக்ஷையில்லாதவர்களைத்தொட்டால், தோஷபரிகாரார்த்தமாய் விபூதியணியவேண்டுமென்றுங்கூறியிருக்கின்றன. அப்படியானால், அதீக்ஷிதர்களாகிய புரோகிதர்களைக்கொண்டு தீக்ஷிதர்களாகிய சைவர்கள் தங்கள் கிரியைகளை நடத்திக்கொள்வது எவ்வளவு அசங்கதமாயும், அநாசாரமாயும், அநீதமாயுமிருக்குமென்பதைச் சைவப்பிரபுக்களெல்லாந் தயைகூர்ந்து யோசிக்கக் கடவர்கள். இது நிற்க.

இவ்விதமாக நமது சமய சாஸ்திரங்களெல்லாம் நிஷேதித்திருக்கும் புரோகிதர்களைக்கொண்டு நமது முன்னோர்கள் கிரியைகளை நடத்திவந்ததற்குக் காரணம் யாது? நமக்குள்ள சாஸ்திர ஆராய்ச்சியுஞ் சமயாபிமானமும் அவர்களுக்கில்லையா? எனச் சிலர் கேட்கக்கூடும். சிவ சிவ முன்னோர்கட்கிருந்த சாஸ்திர ஆராய்ச்சியிலாவது, சமயாபிமானத்திலாவது கோடியிலொரு பங்காயினும் நமக்குண்டெனக் கூறத்துணியோம்! துணியோம்!! அப்பெருந்தகையோரது அனுஷ்டானத்திலிருந்தும், அவர்களபிவிருத்தி செய்ததுமாகிய சாஸ்திர தீபத்தைக் கொண்டன்றோ கால வித்தியாசத்தால் இடையில் நம்மவரிடங் கலந்த துராசாரமென்னுமிருளைத் தொலைக்கத் துணிந்திருக்கின்றோம். அப்படியாயின் அவர்களனுஷ்டித்து வந்த சதாசாரம் இடையிலே துராசாரமாய் மாறுபட்டதற்குத் தான் காரணம் யாதெனின், விவேகிகள் கூறுங்காரணம் பலவுள.

(இன்னும் வரும்)

உ

சிவமயம்.

# சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் வெளியிட்டுள்ள நூல்கள்.

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| "சைவம்" என்னும் மாதாந்தரப் பத்திரிகை (1915௵ முதல் 1919௵ வரையில் வெளிவந்தவை.) | | | | |
| காலிகோ கட்டடம் செய்தது | விலை | 6 | 0 | 6 |
| ஒவ்வொரு வருடப் பத்திரிகை | | 1 | 8 | 6 |
| "சைவம்" நிகழும் வருடப் பத்திரிகை வருடச்சந்தா | | 1 | 8 | 0 |
| ஞானப்பிரகாச சம்பாஷணை | | 0 | 1 | 0 |
| ஞானானந்த சம்பாஷணை | | 0 | 0 | 0 |
| ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் | | 0 | 0 | 6 |
| விவாகவிதியும் கலியுக தருமமும் | | 0 | 0 | 6 |
| சைவ சமயிகளின் கடமை | | 0 | 1 | 6 |
| கோபப் பிரசாத உரை | | 0 | 1 | 6 |
| சிவநின்மாலிய மான்மியம் | | 0 | 0 | 0 |
| திருமுறைப் பெருமை | | 0 | 4 | 6 |

---

## பித்தவாயு லேக்கியம்

நெய் முதலிய பொருள்களின் விலையேற்றத்தையும் இதைச் சித்தப்படுத்துவதனால் நேரிடும் அதிக பிரயாசையையும் நோக்கி இடையில் சிலகாலமாக இந்த லேக்கிய விற்பனை நிறுத்தி வைக்கப்பட்டது. இதனையுண்டு குணமடையப் பெற்றவர்கள் பலர் அடிக்கடி வேண்டிக் கொள்வதனால் இது மறுபடியும் விற்பனைக்குச் சித்தம் செய்யப்பட்டிருக்கிறது. இதை உபயோகித்து வருபவர்களுக்குப் பித்தவாயுவால் உண்டாகும் எவ்வகைப்பட்ட நோய்களும் அணுகா. ஜீரணசக்தி உண்டாம். சரீர புஷ்டியும் பலமும் உண்டாகும். இதுவே உண்மையான தாதுபுஷ்டி மருந்துமாம். வாய்க்கு ருசியாகவும் இருக்கும். பத்தியம் கட்டாயமல்ல. இச்சாபத்தியமிருந்தால் பின்னும் உத்தமம். சிறு பிள்ளைகள் சாப்பிட்டு வந்தால் அடிக்கடி வைத்தியரிடம் போக நேரிடாது. 20 வேளை சாப்பிடக்கூடிய மருந்தின் விலை ரூபா 2. வி. பி. தபாலில் அனுப்பினால் ரூபா 2—4—0.

இலங்கையில் இங்கிருந்து போகும் மருந்துக்கு அதிக வரி விதிப்பதனால் மணியார்டர் மூலமாக முன்பணம் அனுப்புவோர்களுக்கு மாத்திரம் இலங்கைக்கு இந்த லேகியம் அனுப்பப்படும்.

# தமிழகம்.

மலாய் நாட்டிற்கு ஒரே தமிழ்ப் பத்திரிகையாகிய "தமிழகம்" என்னும் உயர்தரப் பத்திரிகை வாரம் இருமுறையாய் பிரதி புதன் சனிக்கிழமைகள் தோறும் வெளிவருகிறது. நம் தமிழ் நாட்டிலிருந்து பினாங் சிங்கப்பூர் மலாகா முதலிய பிரதேசங்களை உளப்படுத்திய மலாய் நாட்டில் குடியேறவும் பிழைப்புக்காகவும் வந்திருக்கும் தமிழ் ஜனங்களின் நன்மைகளைக் கருதியும் உரிமைகளைக் காக்கவும் இப்பத்திரிகை தோன்றியது. இது ஐக்கியமலாய் நாட்டிலுள்ள கோலாலம்பூர் பத்து ரோட்டில் 186, 188, 190-ம் நெம்பர் கட்டடங்களில் அமைக்கப் பெற்றிருக்கும் இண்டஸ்திரியல் அச்சுக்கூட ஸ்வான்தாரர் ஸ்ரீமான் சி. செல்லத்தம்பி அவர்களால் தேர்ந்த தமிழறிவாளிகளைக் கொண்டு நடத்தப்படுவது. இஃது மலாய் நாடு, இந்தியா, பர்மா, இலங்கை முதலிய பல நாடுகளில் விஸ்தாரமாய்ப் பரவுகின்றது. இதன் வருட சந்தா ரிங்கி 10.00 ஆறுமாதத்திற்கு ரிங்கி 5. 50 மூன்று மாதத்திற்கு ரிங்கி 3. 00. இந்தியா, பர்மா, இலங்கை நாடுகளுக்கு வருட சந்தா ரூபாய் 15. ஆறுமாதங்களுக்கு ரூபாய் 8. நீடித்த விளம்பரங்கள் செய்வோர் மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர் "தமிழகம்" ஆபீஸ்,
நெம்பர் 190, பத்து ரோட்,
கோலாலம்பூர்.

---

## வேண்டுகோள்.

சந்தாதாரர்கள் அனுப்பும் சந்தாத் தொகைகளைக்கொண்டே இப்பத்திரிகை நடைபெறவேண்டியிருப்பதனாலும், இத்தமிழ் நாட்டில் நடைபெறும் சைவப்பத்திரிகை இது ஒன்றேயாயிருத்தலாலும், பத்திரிகை சைவசமயாபிவிருத்திக்கு இன்றியமையாத கருவியாயிருப்பதனாலும், சுயப்பிரயோசனம் சிறிதும் இன்றிப் பொதுநலங் கருதியே இது எம்மால் வெளியிடப்படுதலாலும், சைவர்கள் ஒவ்வொருவரையும் இப்பத்திரிகைக்குச் சந்தாதாரர்களாகச் சேர்த்துபகரிக்கும்படி சந்தாதாரர்களை மிகவும் பிரார்த்திக்கின்றோம்.

பத்திராதிபர்.

---

Printed at the Sadhu Press, Royapettah and Published by I. Authimoola Mudaliar, G. T. Madras.